(4) அறிவிப்பு—(தொடர்ச்சி)

(ஆ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவு :

மாண்புமிகு மாற்றுத்தலேவர் (திரு. செ. கந்தப்பன்) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/72) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(எ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/72).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு வரியில்லா நில உடைமைகளுக்கு ரயத்துவாரித் தீர்வை விதிக்கும் சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1972) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று நான் முன்மொழிகிறேன்.

சில நிலங்கள் குறித்துச் செலுத்த வேண்டிய ஆண்டுத் தீர்வையைப் போன்று 20 மடங்குத் தொகையை அல்லது சலுகை வீதத்தில் தீர்வை செலுத்திய பின்னர் 1859-ம் ஆண்டு முதல் அவை வரியில்லாத நிலங்களாக வைத்து வரப்படுகின்றன. இந்த நிலங்கள் வரியில்லா நில உடைமைகள் என அழைக்கப்படுகின்றன. இந்த நிலங்கள் ரயத்துவாரி நிலங்களேயாகும்.

இதில் என்ன நிலைமை என்றால் ஒருவன் அவனுக்குச் சொந்தமான நிலத்திற்குக் கட்ட வேண்டிய தீர்வையை. 20 மடங்குத் தீர்வையை மொத்தமாகக் கட்டினால் அந்த நிலத்திற்கு காலாகாலத்திற்கும் வரியில்லாமல் போகும் என்ற நிலை இருக்கிறது.

---

* 4—12—72-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.